KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 1, 2016

# தமிழியல் சிந்தனையில் ஆளுமை : திருக்குறளையும் ஆத்திசூடியையும் மையப்படுத்திய ஆய்வு

**K. Kanasarajah**
Senior Lecturer in Philosophy
South Eastern University of Sri Lanka
Oluvil

**ஆய்வுச் சுருக்கம்**

ஆளுமை பற்றிய உளவியல் கருத்துக்களை தமிழியல் சிந்தனையாளர்களை விடவும் மேலைத்தேய சிந்தனையாளர்களே அதிகமாக விளக்கியுள்ளார்கள் என்ற கருத்து இன்று மேலோங்கி உள்ளது. அதேபோல் இன்னும் பலரும் பிரயோகிக்கும் சொல்லாகவுள்ளது. தமிழியல் சிந்தனையாளர்கள் மேலைத்தேய சிந்தனையாளர்களுக்கு முன்னரே மனித ஆளுமை சார்ந்த விடயத்தை விளக்கியுள்ளார்கள். குறிப்பாக, திருவள்ளுவரும் ஔவையாரும் ஆளுமைபற்றிக் கூறியுள்ளார்கள். உலகில் உயிரினம் தோன்றியது முதல் உள்ளமும் அதனுடன் இணைந்த வகையில் பரிணாமவளர்ச்சி அடைந்தது. மனித இனம் விலங்கு இனத்தை விட மேம்பட்ட இனமாகும். விஞ்ஞானமும் தொழிநுட்பமும் இன்று வளர்ந்துள்ளது என்றால் அதற்கு முக்கிய காரணம் மனிதனேயாவான். மனிதன் அவனது முயற்சியாலும் திறனாலும் பற்பல தொழிநுட்ப சாதனங்களை உருவாக்கி இருக்கிறான். இந்த செயற்பாடுகள் அனைத்துக்கும் காரணம் தனிமனித ஆளுமைப் பண்பேயாகும். ஆளுமைப் பண்பு ஒரு மனிதனை பிறரிடமிருந்து பிரித்துக்காட்டும் தனித்துவமானதாகும். நமது எண்ணம், உணர்ச்சிகள், பேச்சு, செயல்கள், மூலம் தான் ஆளுமைப் பண்பு வெளிப்படுகின்றது. தமது சுற்றுச் சூழலுக்கும் சமூகத்திற்கும் ஏற்றபடி இணக்கமாக நடந்து கொள்வதையும், சமுதாயத்தில் தமக்குரிய மதிப்பினையும் தமது நல்வாழ்வினையும் ஆளுமைப் பண்பு நிர்ணயிக்கிறது. ஒருவரது ஆளுமைப் பண்பினை நிர்ணயிக்கும் காரணிகளில் பாரம்பரியம், சூழல், சமூகவியல், ஆத்மீகம், உளவியல் போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்துவதாக உளவியலாளர்கள் கூறினாலும் கூட திருவள்ளுவரும் ஔவையாரும் ஆளுமையை பற்றி எவ்வாறான கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள் என்பதை நோக்குவது இவ்வாய்வாகும். இவ்வாய்வில் பகுப்பாய்வு முறை, விபரண ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருக்குறள், ஆத்திசூடி ஆகிய மூல நூல்கள் முதலாம் நிலைத்தரவுகளுக்காகவும் ஆந்நூல்கள் தொடர்பாக வெளிவந்த ஏனைய நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளக்குறிப்புக்கள் என்பன இரண்டாம் நிலைத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்** : திருக்குறள், ஆத்திசூடி, ஆளுமை, தலைமைத்துவம்.

## அறிமுகம்

உளவியல் என்பது ஆங்கிலத்தில் ‘Psychology’ என அழைக்கப்படுகிறது. இச் சொல் Psyche, logos என்ற இரு கிரேக்கச் சொற்களிலிருந்து தோற்றம் பெற்றதாகும். இதன்படி ‘மனிதனது மனம் மற்றும் நடத்தை பற்றிய அறிகையே உளவியலாகும்.’ இவ் உளவியலானது பொது உளவியல், பிரயோக உளவியல் என இருபிரிவுகளாக வகுத்து நோக்கப்படுகிறது. பொதுஉளவியல் என்பது மனிதர்களது அல்லது விலங்குகளது நடத்தைகள் பற்றிய விவரணங்களாக அமைய, பிரயோக உளவியலானது பல்வேறு ஆய்வுகளுடாகப் பெறப்பட்ட உளவியல் கருத்துக்களும் கோட்பாடுகளும் மனிதவாழ்வின் மேம்பாட்டிற்காக பிரயோகிக்கப்படுகின்றமையைக் குறித்து நிற்கின்றது. பல்வேறு துறைகளுடாகத் தொகுக்கப்பட்ட உளவியல் அறிவை குறித்த ஒரு துறைசார்ந்து பிரயோகிக்கும் போது அந்தப்பிரிவு அத்துறை சார்ந்த

உளவியலாகக் கொள்ளப்படும். பிரயோக உளவியலில் விருத்தி உளவியலும் ஆளுமை உளவியலும் இன்று செல்வாக்குப் பெற்ற துறைகளாக விளங்குகின்றன. ஒருவர் தனது வயதிற்கும் வளர்சிக்கும் ஏற்ப அறிவுடனும், திறமையுடனும். மனப்பக்குவத்துடனும், பொருத்தப்பாட்டுடனும் சமூக ஏற்புடையவனாக வாழும் நிலை ஆளுமை எனப்படும். அமெரிக்க உளவியலாளர்கள் கருத்துப்படி ஆளுமை மனிதனுடைய பல்வேறு இயல்புகளின் ஒன்று சேர்க்கையே எனக் கூறுகின்றார்கள். இவ்வியல்புகள் எல்லா மனிதனிடமும் ஒன்றாகக் காணப்படுவதில்லை. குடும்பம், சூழல், வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப மாறுபட்டே காணப்படும்.

ஆளுமை உளவியல் என்பது தனித்துவமுடைய மனிதக் குணங்களை முன்னிறுத்துகின்றது. இவ் உளவியல் பற்றிய சிந்தனையானது இன்று வளர்ந்து வருகின்றது. மேலைத் தேயத்தில் 24 இற்கு மேற்பட்ட ஆளுமைபற்றிய கோட்பாடுகள் இருந்த போதிலும், தமிழர்களுடைய சிந்தனைகளாக மதிக்கப்படும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் குறிப்பாக, திருக்குறளிலும் ஆத்திசூடியிலும் மனித வாழ்க்கையோடு தொடர்புபட்டதாக ஆளுமைதொடர்பான கருத்துக்கள் வலுப் பெற்றுள்ளது. மனித நடத்தையில் உணர்ச்சிகள், நன்னெறிகள், மனச்சாட்சி, அறிவாற்றலோடு தொடர்புபட்ட பண்புகள் ஆளுமைக்கு அவசியம் என்பதை இங்கு எடுத்துக்காட்ட முனையலாம்.

‘ஆளுமை’ பற்றி வரையறை செய்வது உளவியல் ஆராய்ச்சியாளர்க்கே ஒரு கடினமான செயல். ஒரு தனிமனிதன் தனது சுற்றுச் சூழலோடு உறவு கொள்ளும் சிறப்பான முறையை உருவாக்கும் அவரது சிந்தனை, உணர்வுகள், நடத்தைகள் அறிவாற்றல் ஆகியன யாவும் சேர்ந்த ஒட்டுமொத்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் தனித்தன்மையே ‘ஆளுமை’ என வரையறுத்துக்கொள்ளலாம்.

ஒருவரது ஆளுமைப் பண்பு ஒருவரை மற்றவரிடமிருந்து தனியே பிரித்து காட்டும். ஒரே இனம், பண்பாடு கொண்டோரிடம் சில பண்புகள் பொதுவாக இருந்தாலும் தனி மனிதர்களையொட்டிப் பல பண்புகள் வேறுபடும். பிற மனிதர்களுடன் உறவு கொள்வதையொட்டி ஒரு மனிதனின் தனித்துவப் பண்புகள் வெளிப்படும். அவ்வாறு வெளிப்படும் பண்புகள் நேரியலாகவோ, எதிர்மறையாகவோ பரிந்துரைக்கப்படுகின்றன. பிறருடன் நட்போடு உறவாடுவது ஆக்கபூர்வமான செயலாகப் பாராட்டப்படுகின்றது. சமூக உறவுகளைக் கண்டு விலகிச் செல்வது அச்சம், கவலை, தோல்வி மனப்பான்மை ஆகியவற்றின் விளைவுகளாகக் கருதப்படுகின்றது. பொதுவாகவே பல்வேறு ஆளுமைப் பண்புகளின் கூறுகளில் நம்மிடம் சில இருக்கலாம். சில இல்லாதிருக்கலாம். நம்மிடம் உள்ள பல்வேறு பண்புநலன்களின் மொத்த அமைப்பே நமது ஆளுமைப் பண்பாக குறிப்பிடப்படும். அந்த பண்பு நலன்கள் வெவ்வேறு நிலைகளில் நம்மிடம் இருக்கலாம். வலுவான நிலையிலோ, நடுநிலையிலோ, வலுவற்ற நிலையிலோ அமைந்திருக்கலாம்.

ஆளுமைப் பண்பு நலன்களில் முப்பதைந்து கூறுகளை தங்களது ஆய்வுகளில் உளவியல் அறிஞர்கள் கண்டுள்ளனர். குறிப்பாக, மேலைத்தேய சிந்தனைமரபில் ஆளுமைசார்ந்த விடயத்தை கோட்பாட்டு வடிவில் பல சிந்தனையாளர்கள் விளக்கியுள்ளனர் குறிப்பாக Hippocrates, Kretschmer, Sheldon,C.G.Jung, A.Adler, W.Allport,Sigmund Freud, A.Maslow, R.B.Cattell போன்றோரைக் குறிப்பிடலாம்.( Group of Editors, 1987:154) இந்த உளவியல் நிபுணர்களில் அமெரிக்க உளவியலாளர்கள் ஆளுமை தொடர்பாகப் பல கூறுகளைப் பரிந்துரை செய்துள்ளார்கள். அவையாவும் பின்வரும் அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஆளுமை என்பது தனிச்சிறப்பு வாய்ந்த அம்சம். ஒருவரது ஆளுமை மற்றவரோடு ஒத்ததாக இல்லை. ஆளுமையானது படிப்படியாக விருத்தியடையக் கூடியது. சூழலுக்கும் மனிதனுக்குமான தொடர்பானது ஆளுமை விருத்திக்கு அடிப்படையாகும். ஆளுமையானது பல்வேறு அம்சங்களோடு தொடர்புபட்டதாகும்.

## திருக்குறளும் ஆத்திசூடியும் - ஓர் அறிமுகம்

உலக மக்களால் தெய்வப் புலவர் எனப் போற்றப்பட்ட திருவள்ளுவர் திருக்குறளைப் படைத்ததுடன் உலக அரங்கில் தமிழ் மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைபெறச் செய்தவர். அத்தோடு இந் நூல் உலகப் புகழ்பெற்ற இலக்கியமாக மாறி தமிழர்களுக்குப் பெருமையைத் தேடித் தந்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. இந்நூல் சங்க இலக்கியத்தின் பிரிவில் பதினெண் கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் இருக்கிறது. மேலும் எமது வாழ்வியலில் எல்லா சங்கங்களையும் இனம், மொழி, பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருந்துவது போல் கூறி உள்ளதால் திருக்குறளை சிறப்பிக்கும் விதமாக உலகப் பொதுமறை என்றும் தெய்வநூல், பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம் போன்ற பல பெயர்களால் சிறப்பித்து அழைக்கின்றனர். 1330 செய்யுள்களைக் கொண்டு ஈரடிகளில் உளத்தத்துவங்களையும் சொன்னதால் இது ஈரடிநூல் என்றும் அறம், பொருள், இன்பம் அல்லது காமம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டதால் முப்பால் என்றும் அழைக்கப்படும். இந்நூல் மனிதர்கள் தம் அகவாழ்வில் சுமுகமாக கூடி வாழவும் புறவாழ்வில் இன்பமுன், இசைவாக, நலமுடன் வாழத் தேவையான பல அடிப்படை ஆளுமைப் பண்புகளை எடுத்து விளக்குகின்றது.

அதேபோல் ஆத்திசூடியை எடுத்து நோக்கும்போது ஔவையார் 12ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் வாழ்ந்ததாக கூறப்படுகின்றது. இவரது பெயருக்கு தவப் பெண் அல்லது மூதாட்டி என்றும் இன்னுமொரு வகையில் அறிவாற்றலில் முதிர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படுவதாயும் உள்ளது. மனித வாழ்க்கைக்குத் தேவையான மகத்தான தத்துவங்களை வாரி வழங்கிய ஔவையாரினால் 59 செய்யுள்கள் பாடப்பட்டுள்ளன. அவை குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் காணப்படுகின்றன. அவற்றில் புறத்திணைப் பாடல்கள் 33, ஏனைய 26 அகத்திணைப் பாடல்கள் எனப் பகுத்தும் கூறப்படுகின்றன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, ஞானக்குறள், நல்வழி நாற்பது போன்ற பாடல்களை இயற்றியவர் ஔவையார். இவர் இயற்றிய பாடல்களில் ஆத்திசூடி மிகவும் முக்கியமானதாகும். பழகப்பழகத்தான் பல நற்பண்புகள் நம்மிடம் வளர்ந்து நிலை கொள்ளும் அந்தவகையில் ஒரு மனிதன் என்னென்ன செய்யவேண்டும் என்பதைக் கட்டளைபோன்று ஒரே வரியில் கூறுகிறது. ஔவையின் ஆத்திச்சூடியிலும் திருக்குறளிலும் வெளிப்படும் ஆளுமைப் பண்புகளை இனங்காண்பதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. சீரிய ஆளுமைப் பண்புள்ளவர்கள் வேந்தர்களுக்கொப்ப தலைவர்களாகத் திகழ்வார்கள் என்று கூறுகின்றார் வள்ளுவப் பெருந்தகை கூறும் போது

**“அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கி யல்பு” ( குறள் : 382 )**

தான் எதிர்கொள்ளும் எந்தவொரு பிரச்சினையையும் கண்டு மலைத்துப்போய் அஞ்சி ஒளிந்து விடாது துணிவோடு சமாளிப்பது சிறந்த பண்பு என எடுத்துரைக்கிறார். ஈகை எனும் உயர்பண்பு முக்கியப்படுத்தப்படுகிறது. ஒரு மனிதனுக்கு சமூகத்தில் மதிப்பினையும் மனதுக்கு நிறைவையும் மகிழ்ச்சியையும் அளிக்கும் பண்பு. அடுத்து அறிவு, எந்தத்துறையிலே ஒருவன் ஈடுபடுகிறானோ அதுபற்றிய முழுமையான அறிவு ஒருவர்க்குவேண்டும். அப்போதுதான் அதில் எதிர்வரும் பிரச்சினைகளை அவர் எளிதில் சமாளித்து வெற்றிகாண முடியும். மற்றுமொரு சீரிய பண்பாக ‘ஊக்கம்’ ஆளுமை மேம்பாட்டில் முக்கிய இடம் வகிக்கின்றது. ஊக்கம் இன்றி எந்தவொரு செயலையும் திறம்படச் செய்யவோ குறிப்பிட்ட காலத்தில் முடிக்கவோ இயலாது என்கிறார். அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் ஆகிய நான்கும் ஆளுமைக்கு அவசியம் என்கின்றார். . இதனையே ஔவையார் **“ஊக்கமது கைவிடேல்”** எந்தக் காலகட்டத்திலும் தளராது ஊக்கத்துடன் செயற்படவேண்டும் என்கிறார்.

மேலும் வள்ளுவப் பெருந்தகை ஆளுமைசார்ந்த கருத்துக்குப் பொருத்தமுறுமாறு இந்தச் செயலை இத்தன்மைகளாலே இவன் செய்து முடிப்பவன் ஆவான் என்று ஆராய்ந்து அறிந்து அச்செயலை அவனிடத்திலே ஒப்படைத்து விடுக என்கிறார்.

**“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்”**
( குறள் 517)

இதன் மூலம் தனிநபருக்குரிய தனித்துவம் பேணப்பட வேண்டும் என்ற கருத்தை வள்ளவரும் ஆதரிப்பதைக் காண்கின்றோம். மேலும் ஒரு இடத்தில் வள்ளுவர் குடிமை என்ற அதிகாரத்தில் குடிப்பிறப்பின் பண்பு பரம்பரையில் தங்கியிருக்கிறது என்கிறார். நிலத்திலே புதைந்துள்ள விதையின் தன்மையை அதிலிருந்து வெளிப்படும் சிறிய முளை காட்டும். அதேபோல் ஒருவருடைய வாய்ச்சொல் அவனது குடிப்பிறப்பைக் சுட்டிக்காட்டும் என்பதை கீழ்வரும் வரிகளில் கூறுகிறார்.

**‘‘நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்’’**

அதேபோல் வள்ளுவர் இன்னுமொரு இடத்தில் கூறும் போது

**“எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லைஆதிர வருவதோர் நோய்”**
**( குறள் : 429 )**

பின்னர் நேரிடப்போவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளுதல் மிகவும் போற்றக்கூடியதொரு திறனாகும். அத்தகைய திறன் படைத்தவர்கள் பின்னர் நேரிடக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்க்கத் தேவையான முயற்சி மேற்கொள்வர். நேரிட்டால் அவற்றை எதிர்கொள்ளத் தேவையான யுக்திகளையும் தயாராக வைத்திருப்பார்கள். எனவே எந்தப் பிரச்சினையும் அவர்களை அதிரும் வகையில் தாக்காது. எதனையும் எளிதில் எதிர்கொள்ளும் ஆளுமை அவர்களிடம் உள்ளது.

ஆளுமை மேம்படத் தேவையான ஐந்து உயர் பண்புகளாக அன்பு, நாண், ஒப்புரவு, வாய்மை, கண்ணோட்டம் என்பன உள்ளன. இது குறித்து வள்ளுவர் கீழ்வருமாறு கூறுகின்றார்.

**“அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையென ஐந்து சால்பு ஊன்றிய தூண்”**
**( குறள் : 983 )**

மனிதத் தன்மையின் முதல் அங்கம் அன்பு. ஒருவர் காட்டுகின்ற அன்பு பன்மடங்கில் பல்வேறு இடங்களில் அவருக்குத் திரும்பக்கிடைக்கும். நாண் என்பது தவறான செயல்களைச் செய்வதற்கு ஒருவர் நாணி அவற்றை ஒதுக்க வேண்டும் என்பதையே குறிக்கின்றது. குற்றம் புரிந்து கைது செய்யப்பட்ட பின்னர் சிலர் முகத்தை மறைத்துக் கொண்டு செல்வதை நாம் காண்கின்றோம். அத்தகைய நாணம் குற்றம் செய்வதற்கு முன்னரே இருந்தால் குற்றத்தைத் தவிர்த்து விடலாம்.ஒப்புரவு என்பது நாம் பெரியோர்களிடம் காட்டும் மதிப்பினைக் குறிக்கிறது. அது சமூகத்தில் நமது மதிப்பினையும் உயர்த்தும். அடுத்து கண்ணோட்டம், கண்ணோட்டம் என்பது நாம் பிறப்பால் காட்டும் பரிவினைக் காட்டுகின்றது. பரிவோடு அணுகினால் விளைவு பிறர்க்கு நன்மையும் மகிழ்ச்சியும் அளிப்பதோடு நமக்கும் மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். சொல்வன்மை ஒருவர் ஆளுமைக்கு அழகூட்டுகிறது என முன்னரே கண்டோம். மேலும் அதனை வள்ளுவர் விளக்கும் போது சொல்லாட்சியில் ஆளுமை கொண்டவர் சிறப்பு யாது?

**“சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது”**
**( குறள் : 647 )**

சோர்வு இல்லாது, அஞ்சாது சொல்வதற்கு வல்லவனாக சொல்லில் செல்வனாக ஒருவன் திகழ்வானேயானால் அவனை யாராலும் வெல்ல இயலாது என அறுதியிட்டுக் கூறுகிறது குறள். எனவே பேச்சுத்திறனை வளர்த்து ஆளுமைப் பண்பினை விருத்தி செய்ய வேண்டும். இதனையே ஆத்திசூடி **“நயம்பட உரை”** சொல்லவேண்டியதை பிறர் ஏற்கும்படி

இனிமையாகவும் நயமாகவும் எடுத்துரைக்கவேண்டும் என்றார்.

மனித உறவுகளை மேம்படுத்தல் இன்றைய சமூகவாழ்வில் அனைவருக்கும் மிக இன்றியமையாத தேவை எனலாம். நமது பண்பு நலன்களை வெளிக்காட்டுவது நமது பேச்சுக்களேயாகும்.

**“யாகாவர் ஆயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு” ( குறள் : 127 )**

பிறருடன் நல்ல உறவுகளைப் பேண விரும்புவர் எதைக்காக்காவிட்டாலும், தனது பேச்சினைக் கட்டுப்படுத்த வேண்டும். நாவடக்கம் வேண்டும். தவறான சொற்கள் உறவினை முறிக்கும். என்கிறார் வள்ளுவர் மேலும் அவர் கூறும் போது

**“அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின்” ( குறள் : 92 )**

உள்ளம் மலர்ந்து பிறர்க்குக் கொடுத்தல் உயரிய அறம் என்று உலகத்தாரால் போற்றப்படுகிறது. அதை விடப் பெரிய அறம் முகம் மலர்ந்து இனிய சொற்களைப் பேசுதல் என்று வலியுறுத்திக்கூறுகிறார் வள்ளுவர். கொடையை விட மனித உறவுகளை மேம்படுத்தக்கூடிய ஆற்றல் புன்னகையோடு இனிய சொற்களைப் பேசுவதிலே உள்ளது. அதற்குப் பொன்னோ, பொருளோ தேவையில்லையென்கிறார். மேலும், வள்ளுவப் பெருந்தகை.

**“பணி உடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்குஅணி அல்ல மற்றுப்பிற” (குறள் : 95 )**

பெருக்கத்து வேண்டும் பணிவு என்று வேறொரு குறளிலே குறிப்பிட்ட வள்ளுவர், ஒருவன் கல்வி, கேள்விகளிலோ, செல்வத்திலோ, பதவியிலோ எத்துணை பெரியவனாக இருப்பினும் அவனுக்குப் பணி உடைமை முக்கிய தேவை என்று கருதுகிறார். பணி உடைமையும் இன் சொல்லுமே ஒருவனுக்கு முக்கிய அணிகலன்கள். பொன்னோ, இரத்தினமோ அவற்றிற்கு ஈடாகாது. பணிவும் இன்சொல்லுமே உறவுகளை வளர்த்து ஒருவனை உயர்த்தும்.

**“சினம் எனும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் எனும் ஏமப் புணையைச் சுடும்” ( குறள் : 306 )**

மனித உறவுகளை மேம்படுத்த வேண்டிய ஒருவர் சினம் எனும் தீய பண்பை அறவே ஒழிக்கவேண்டும். ஏனெனில் சினம் எனும் தீயகுணம் யாரிடத்தில் சேர்ந்து குடிகொண்டுள்ளதோ அவரை அழித்தொழித்துவிடும். அதுமட்டுமல்ல நெடுநாட்களாக அவரிடம் பாசம் பூண்டு ஒழுகும் உற்றார், உறவினர், நண்பர் ஆகியோரையும் அவரிடம் இருந்து பிரித்துவிடும். இதனையே ஆத்திசூடி **“ஆறுவது சினம்” என்கிறது.** சினம் பல பிரச்சினைகளை உருவாக்கும் என்பதால் சினத்தைப் பொங்கி எழ விடாது அடக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டுகிறார் ஔவையார்.

**“திறன் அல்ல பிறர் செய்யினும் நோநொந்து அறன் அல்ல செய்யாமை நன்று” ( குறள் : 157 )**

நமக்குத் தவறை இழைத்தாலும் மனம் நொந்துபோய் நாம் அவர்களுக்குத் திரும்ப தீய செயல்களைச் செய்யாமலிருப்பதே நன்று என்று கூறுகிறார். நல்லுறவிற்கு இதைவிட வேறு என்னவேண்டும் எனச் சுட்டிக்காட்டுகிறார். **“கீழ்மை அகற்று”** கீழ்த்தரமான பண்புகளை விட்டொழித்து நல்ல பண்புகளை வளர்க்க வேண்டுமென்கிறார்.

**“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று” ( குறள் : 108 )**

பிறர் நமக்குச் செய்யும் உதவியை, நன்மையை நாம் ஒருபோதும் மறக்காது அவரிடம் நன்றி பாராட்ட வேண்டும். அதே நேரத்தில் பிறர் நமக்கு ஏதும் தீங்கு செய்தால் அதை நினைத்துக் கொண்டே இருந்து அவர்பால் தொடர்ந்து பகைமை பாராட்டாது அவர் செய்த தீமையை

அப்போதே மறந்துவிட வேண்டும். நமது மனம் அழுத்தம், இறுக்கம் இன்றிச் செயற்பட இவை அவசியம் என்றார்.

மனித உறவுகள் மேம்பட்டு ஒருவரது ஆளுமை சிறந்து விளங்க வாய்மை, பொய்மை பற்றி ஒருவர் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல் நலம்.

**“வாய்மை எனப்படுவது யாதெனில் யாது ஒன்றும் தீமை இலாத சொலல்” ( குறள் : 291 )**

உண்மை பேசுவதாக எண்ணி கொண்டு சிலர் தெரிந்தோ தெரியாமலோ பிறர் மனம் புண்படும் படியோ பிறர்க்குத் தீங்கு நேரும் படியோ பேசுவர். அவர் பேசுவது உள்ளபடியே அமைந்திருந்தாலும் அது பிறர்க்குத் தீங்கு விளைவிக்குமானால் அது உண்மையாகாது என்பதுவே வள்ளுவன் வாக்கு. இதனை ஔவையார் **“தீவினை அகற்று”** பிறர்க்குத் தீயன செய்வதைத் தவிர்க்க வேண்டும் நன்மை செய்வதன் மூலம் தமக்கு நேரிடும் தீங்குகளைக் களையவேண்டும்.

**“பொய்மையும் வாய்மைஇடத்தது புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்” ( குறள் : 292 )**

வேறு யாருக்கும் தீமை விளைவிக்காது பிறர்க்கு நன்மை பயக்குமானால் அச்சொல் உண்மைக்குப் புறம்பாக இருந்தாலும் வாய்மையே ஆகும் என்று விளக்குகிறது இக்குறள். இங்கு தத்துவஞானி சாக்ரடீசின் கருத்து ஒப்புநோக்கத்தக்கது.

ஒரு செய்தியைப் பிறரிடம் கூறமுன்னர் மூன்று சல்லடைகளால் சலித்துப் பார்த்துவிட்டு சொல்லுங்கள். நீங்கள் சொல்வது சரிதானா? அது யாருக்கும் நன்மை செய்யுமா? அது யாருக்கும் தீமை விளைவிக்காதா? எனக் கூறுகிறார் சாக்ரடீஸ். வள்ளுவர் இன்னுமொரு படி மேலே போய் குற்றமற்ற நன்மை பயக்குமானால் பொய்மையும் வாய்மைக்கு நிகராகும் என்கிறார்.

**“அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்பு எனும் நாடாச்சிறப்பு” ( குறள் : 74 )**

பிறர்பால் நாம் காட்டுகின்ற அன்பு நம்மால் பிறர்க்கும் ஏனைய தொடர்புடையோருக்கும் ஆர்வத்தை ஊட்டி இறுதியில் கிடைத்தற்கரிய நட்பு எனும் உறவைத் தேடித்தரும். ஆளுமைப்பண்பு மேம்பட தேவையான பலவற்றை முன்னர் கண்டோம். தவிர்க்க வேண்டியவற்றை வள்ளுவர் வாய்மொழியில் கேட்போம்.

**“அழுக்காறு அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்” ( குறள் : 35 )**

அழுக்காறு எனும் பொறாமைப் பண்பு ஒருவர் தான் முன்னேறும் வழிகளைக் காணாது பிறர்க்குத் தீங்கு செய்யும் செயல்களை நாடச் செய்கின்றது. ஒருவரது இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் மூல காரணமாக அமைவது ஆசையே என புத்தபெருமான் கூறியுள்ளார். வெகுளி எனும் சினம் யாரிடம் உள்ளதோ அவரையே கொல்லக்கூடியது என வள்ளுவரே முன்னொரு குறளில் தெளிவுறக் கூறியுள்ளார். இன்னாச்சொல் கூறுபவர் எவ்வாறு தன் சொல்லால் தானே கெட்டு வருந்த நேரிடும் என்பதையும் முந்தைய குறட்பாக்கள் விளக்கியுள்ளன. இதனையே ஆத்திசூடி **“அறம் செய்ய விரும்பு”** அறச் செயல்களை விருப்பத்தோடு செய்யவேண்டும். அவ்வாறுசெய்யும் போது ஏற்படும் திருப்தி எமது அகத்தை வளப்படுத்தும் என்று கூறுகிறார். மேலும் **“மொழிவது அறமொழி”** நல்ல அறம் சார்ந்த பொருள்களையே கூறவேண்டும்.

எனவே, உயரிய பண்புகளை ஒருவர் நிலைநிறுத்திக்கொள்ள முதல்கட்டமாக பொறாமை, பேராசை, சினம், இன்னாச்சொல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. ஒருவர் ஆளுமைப் பண்பில் சிறந்து விளங்கினால் சமூகம் அவரைப் பாராட்டும். சமூகத்திற்கேற்ற முறையில் பண்புகள் சிறந்திருத்தல் நலம்.

**“உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்”**
**( குறள் : 140 )**

என்னதான் பலதுறைகளில் தேர்ச்சி பெற்று கல்வியில் சிறந்து விளங்கினாலும் உலகத்தோடு ஒத்து வாழக் கற்றிருத்தல் முக்கியத் தேவை என இக்குறள் உணர்த்துகிறது. இதனை ஔவையார்

**“சான்றோர் இணைத்திரு”** சான்றோர்களுடன் நட்புகொண்டு வாழவேண்டுமென சுட்டிக்காட்டுகிறார்.

மேலும் ஔவையார் தனிமனித ஆளுமைப்பண்பை வளர்ப்பதற்கான பண்புகளைக் விளக்குகிறார். **உடையது கரவேல்** தனது உடைமைகளை பற்றிப் பிறரிடம் பெருமையாகக் கூறுதல் நல்லவர்களுக்குரிய பண்பல்ல. **ஊக்கமது கைவிடேல்** எந்தக் காலகட்டத்திலும் தளராது ஊக்கத்துடன் செயற்படவேண்டும். **எண்ணெழுத்து இகழேல்** கல்வி கற்பதை இகழ்ந்து ஒதுக்காது ஆர்வத்துடன் கணிதத்தையும் இலக்கியத்தையும் கற்கவேண்டும். அதன் மூலம் விமர்சனம், புரிந்துகொள்ளுதல், நுண்மதி, ஞாபகம், போண்றவற்றை வளர்க்க வேண்டும். **நப்போல் வளை** வளைந்து கொடுத்து வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். சிறந்த ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கு ஒருவர் தனது விட்டுக்கொடுப்பு, சேர்ந்து வாழ்தல் சமூகமயமாதல் அவசியம் என்கிறார். **சான்றோர் இனத்திரு** சான்றோர்களுடன் நட்புகொண்டு. வாழவேண்டும். **செய்வன திருந்தச்செய்** செய்யக்கூடிய செயல்களைப் பழுதின்றி. சரியாக முழுமையாகச் செய்யவேண்டும். **சொல்சோர்வு படேல்** தவறான சொற்கள் பேசுவதைத் தவிர்க்கவேண்டும். **தானமது விரும்பு** எளியோர்க்கும் வறியோர்க்கும். தன்னால் இயன்ற அளவு தானமளிப்பதை விரும்பவேண்டும். **தூக்கி வினை செய்**. எந்தச்செயலையும் விடாமுயற்சியோடு. செய்யவேண்டுமெனக் கூறுகிறார். **மூர்க்கரோடு இணங்கேல்** வெறிபிடித்த மூடர்களுடன் இணைந்து செயற்படலாகாது. **மொழிவது அறமொழி** நல்ல அறம் சார்ந்த. பொருள்களையே கூறவேண்டும். **ஔவியம் பேசேல்** பிறரைப்பற்றி மனம் போனபடி எல்லாம் மற்றவர்களிடம் புறம்கூறலாகாது அவ்வாறு செய்வது சிறந்த மனிதத்தன்மையையும் ஆளுமையையும் வெளிப்படுத்தாது என்கிறார்.

## முடிவுரை

சிறந்த ஆளுமை உடையவரிடம் முதலில் காணப்படுவது அஞ்சாமை, தற்துணிவு, விவேகம், சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மை, சுறுசுறுப்பு, பொறுப்புணர்ச்சி, பொறுமை, தலைமை தாங்கும் பண்பு, எதற்கும் முன்வந்து செயற்படும் திறன், சமூக ஏற்புடமை, போன்ற பல பண்புகள் ஆளுமையோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. பொதுவாகவே உளவியலில் ஆளுமை என்ற விடயம் மேலைத்தேய சிந்தனையில் பல கோட்பாடாக புகழ் பெற்று விளங்கும் நிலையில் வள்ளுவரினதும் ஔவையாரினதும் சிந்தனைகளின் வழி ஆளுமை பற்றிய சிந்தனைகள் கீழைத்தேய மெய்யியல் பக்கம் அல்லது தமிழியல் சிந்தனையின் பக்கம் எமது சிந்தனையை மையப்படுத்த வைக்கின்றது. இன்றைய ஆளுமை பற்றிய கருத்துக்கள் மேலைத்தேய சிந்தனையாளர்களுடையதுதான் என்ற சிந்தனை மாறி கீழைத்தேயத்திலும் இவ்விடயம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது என்பதை இவ் ஆய்வு தெளிவுபடுத்தியுள்ளது.

## உசாத்துணைகள்

இராயேந்திரம் ஸ்ராலின், 2015, **ஆளுமைக் கொள்கைகள்**, யாழ்ப்பாணம்

கந்தசாமி.சொ.ந., 2005, **தத்துவ நோக்கில் தமிழிலக்கியம்**, சென்னை, மாணிக்கவாசகர் பதிப்பகம்.

சரவணன்.ப., 2001, **ஔவையார்**, சக்தி பிரின்டஸ், சென்னை.

சிவானந்தமூர்த்தி.க, மற்றும் அன்ரனி டயஸ், 1998, **உளவியல் அறிமுகம்**, அம்பாள் வெளியீட்டகம், யாழ்ப்பாணம்

சீனிவாசன்.ச., 1997, திருக்குறள், பரிமேலழகர் உரை, சென்னை, சென்னைஆப்செட்

சுந்தரசீனிவாசன்.எஸ், 2010, **ஆளுமை மேம்பட**, சென்னை

பத்மநேசன்.ச 2019, **சமூகஉளவியல்**, சேமமடு பதிப்பகம், கொழும்பு

வரதராசன்.மு, 2004, **திருக்குறள் தெளிவுரை**, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம், சென்னை

8. ஜெயராசா சபா, 2009, **கற்றல் உளவியல்**, சேமமடு பதிப்பகம், கொழும்பு

9. Cattle, Raymond B., 1950, **Personality**, USA, McGraw- Hill book company

10. Pettijon,Terry F., 1992, **Psychology** : A Concise Introduction , USA, The Dushkin Publishing company Pvt.